பாடம் 7

மே 9-15



# நடைமுறை ஜெபம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1இராஜா 19:1–18; மத் 6:5–8; லூக் 11:2–4; மத் 6:5–15; தானி 9:4–19; ரோமர் 8:26, 27.

**மனன வசனம்:** ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். சங் 62:8.

உங்களுடைய ஜெபவாழ்க்கை எப்படிப்பட்டது? எத்தனை தடவை ஜெபிக்கிறீர்கள்? எவ்வளவு ஈடுபாட்டுடன் ஜெபிக்கிறீர்கள்? எவ்வளவு எதிர்பார்ப்புடன் ஜெபிக்கிறீர்கள்? தினமும் ஜெபிக்கிறீர்களா? அல்லது அவசர நேரங்களில் மட்டும் ஜெபிக்கிறீர்களா? உங்கள் ஜெபம் எப்போதும் எதையாவது கேட்பதாக இருக்கிறதா? அல்லது ஜெபத்தில் தேவனுக்குத் துதியும் செலுத்துகிறீர்களா?

மேலும், காலையில் சாப்பிடுவதற்குமுன் ஜெபிப்பதுண்டா? அந்த நாள் முழுவதும் வேலையில் மும்முரமாக இருக்கும்போதும் அவ்வப்போது ஜெபிப்பதுண்டா? ஒருவேளை நீங்கள் ஒரு ஜெபக்குழுவில் இருக்கலாம், 24 மணி நேர ஜெபச் சங்கிலி அனுபவத்தைப் பார்த்திருக்கலாம். ஜெபத்தின்மூலம் உங்கள் வாழ்க்கையில் எல்லாமே மாற்றமடைகிற வகையில் தேவனுடைய வல்லமையையும் பிரசன்னத்தையும் அனுபவித்திருக்கிறீர்களா?

கிளைகளாகிய நமக்கும், செடியாகிய இயேசுவுக்கும் இடையேயுள்ள நிலையான தொடர்புதான் ஜெபம். நாம் வளர்ந்து, செழிக்க விரும்பினால், ஜீவனுள்ள செடியிலிருந்து சாற்றையும் சத்துக்களையும் நாம் தொடர்ந்து பெற வேண்டும்; செடியிலிருந்து பிரிக்கப்பட்டால், நமக்குப் பெலன் இருக்காதே. இயேசுவோடு நிலைத்திருந்து ஜெபிப்பதால் கிடைக்கிற ஆசீர்வாதம் இதுவே தேவன் நம் ஜெபங்களைக் கேட்கிறார்; எப்போதும் நாம் எதிர்பார்க்கிற வழியில் இல்லாவிட்டாலும், தம்முடைய நேரத்தில், தமக்குச் சித்தமான வழியில் எப்போதும் பதிலளிக்கிறார்.

வேதாகமத்தில் ஜெபித்த சிலரைப்பற்றியும், நம் அனுதின வாழ்க்கையில் ஜெபப்பழக்கத்தை வலுப்படுத்துவதற்கான நடைமுறை வழிகளையும் இந்த வாரம் ஆராய்வோம்.

*2026, மே 16 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# நெருக்கடியில் ஜெபித்த எலியா

ஆகாப் ராஜா ‘இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கும்படிக்கு தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களெல்லாம் செய்ததைப்பார்க்கிலும் அதிகமாய்ச் செய்துவந்தான்’ 1இராஜா 16:33. அப்படிப்பட்ட துன்மார்க்கமான காலங்களில் உண்மையுள்ள எலியா வாழ்ந்தார். எலியாவின் வாழ்க்கையில் மிகவும் பரபரப்பான அனுபவம் கர்மேல் மலை சம்பவம். 1இராஜா 18. அந்தச் சம்பவத்தின் இறுதியில், தேவன் ஜெபத்திற்குப் பதிலளிப்பதை ஆகாபும் அவனுடைய குடிமக்களும் நேரடியாகக் கண்டனர். அது இஸ்ரவேல் வரலாற்றில் மறக்கமுடியாத தருணமாக இருந்தது, அதனால்தான் இந்தச் சம்பவத்தில் நிகழும் திடீர் மாற்றங்கள் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன.

**1இராஜா 19:1-18இல், குறிப்பாக எலியாவின் ஜெபத்தையும், தேவன் அவருடன் இடைபட்டதையும் கவனியுங்கள். எலியாவின் மனச்சோர்வுக்கு முக்கியக் காரணம் என்ன? கர்மேல் மலையில் தேவன் பதிலளித்த விதமும், இங்குப் பதிலளித்த விதமும் எவ்வாறு வேறுபடுகிறது?**

---

ஒருநாள் முழுவதும், எலியா கேட்டுக்கொண்ட ஒவ்வொன்றிற்கும் தேவன் பதிலளித்திருந்த நிலையில், தீர்க்கதரிசியின் உணர்வுநிலையும், மனநிலையும், உடல்நிலையும் திடீரென மாறியது. அன்று தேவனோடு சேர்ந்து எலியா மிகப்பெரிய வெற்றியை அனுபவித்திருந்தாலும் கூட, ஒரு கணம் மனச்சோர்வுக்கு இடமளித்ததால், தேவனிலான விசுவாசத்தை மரணப்பயம் மேற்கொள்ள அனுமதித்தார். இந்தச் சம்பவத்தில் கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், எலியா மனச்சோர்வுக்கும் அதைரியத்திற்கும் ஆளானாலும்கூட, தேவன் கனிவாகவும் அக்கறையோடும் அவரிடம் சென்று, அவருக்கு மீண்டும் உணவும் தண்ணீரும் கொடுத்தார். 1இராஜா 19:5,6. அந்தப் போஜனத்தின் பெலத்தால் அவரால் 40 பகல்களும், 40 இரவுகளும் தாக்குப்பிடிக்க முடிந்தது. 1இராஜா 19:8.

நம் வாழ்க்கையில் சிலசமயங்களில் தேவன் நேரடியாக, வல்லமையாக, மறுக்கமுடியாத வழிகளில் பதிலளிக்கிறார். இது நம் விசுவாசத்தைப் பெலப்படுத்துகிறது, நம் வாழ்க்கையில் தேவனுடைய நெருக்கத்தை உணருகிறோம்.

மற்ற நேரங்களில், தேவனைப் பின்பற்றுவது கடினம் என்று நினைக்கிறோம். தடுமாறி, சோதனையில் விழுகிறோம்; நாம் எதிர்பார்க்கிற வழிகளில் தேவன் நம் ஜெபங்களுக்குப் பதிலளிக்க எதிர்பார்க்கிறோம், நம் எண்ணங்களையும் வழிகளையும்விட அவருடையவைகள் மேலானவை, ஞானமுள்ளவை என்பதை நாம் உணர்வதில்லை. ஏசா 55:8,9. தேவனுடைய சிருஷ்டிப்புபற்றி இன்னும் நமக்குத் தெரியாதவை எவ்வளவு அதிகம் உண்டோ, அதுபோல தேவனுடைய வழிகள்பற்றி நாம் புரிந்துகொள்ளாதவை அதிகம் உண்டு.

---

**நல்லவரும் இரக்கமுள்ளவருமான தகப்பனாகிய தேவன் நமக்கு என்ன தேவை என்று சரியாக அறிந்திருக்கிறார். இவை அனைத்திற்கும்மத்தியில் நீங்கள் எவ்வாறு அவரை நம்பலாம்? உங்கள் கண்களை அவர் மீது உறுதியாக நிலைநிறுத்தலாம்? இதைப் பற்றி இப்பொழுதே அவரிடம் பேசுங்கள்.**

# ஜெபத்திற்குப் பதில்கிடைக்காததாகத் தோன்றும்போது

நீங்கள் ஒரு காரியத்திற்காக நீண்டகாலம், ஏன் வருடக்கணக்கில் ஜெபித்தும், தேவன் உங்கள் ஜெபங்களைக் கேட்காததுபோல உணர்ந்திருக்கலாம். 'கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்', 'நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறார்' என்று வேதாகமம் சொல்கிறது. 1யோவான் 5:14. இந்த வாக்குறுதிகளை எவ்வாறு புரிந்திருக்கிறீர்கள்?

குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக ஜெபித்த அர்ப்பணிப்புமிக்க ஒரு பெண் அன்னாள். 1சாமு 1:10-17. முதலில் தேவன் அவளுடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்காததுபோலத் தெரிந்தது, ஆனால் அவள் ஜெபத்தில் நிலைத்திருந்தாள். தேவன் தமக்கேற்ற நேரத்தில், தம் சித்தத்தின்படி பதிலளித்தார். சில சமயங்களில் காத்திருக்கும்போது, அவரை அதிகமாக நம்புவதற்கு நாம் கற்றுக்கொள்வதால், அது தேவனோடுள்ள நம் அனுபவத்தைப் பெலப்படுத்துகிறது.

'ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்.' சங் 62:8. நம் ஜெபங்களுக்கு உடனடியாகப் பதில் கிடைக்காவிட்டாலும், நமக்கு எது நல்லதென அவருக்குத் தெரியும் என்று நம்புகிறோமா? தமக்கேற்ற நேரத்தில், சரியான வழியில் அவர் பதிலளிப்பார் என்று நம்புகிறோமா?

சிலசமயங்களில் நாம் விரும்புகிற வேகத்தில் அல்லது நாம் எதிர்பார்க்கிற விதத்தில் நம் பதில் கிடைக்காமல் இருக்கலாம். அதுபற்றி வேதாகமம் கொடுக்கிற ஆலோசனை என்ன?

> **உங்களுடைய சித்தத்தை அல்ல, தேவனுடைய சித்தத்தை நாடுங்கள்.** மத் 6:10; 1யோவான் 5:14, 15.
>
> **உங்களுடைய நோக்கங்களை ஆராயுங்கள்.** நீதி 16:2; யாக் 4:3.
>
> **நீங்கள் விடாமல் வைத்திருக்கிற பாவம் இருக்கிறதாவென யோசியுங்கள்.** சங் 66:18; 1பேதுரு 3:12; நீதி 15:29.
>
> **தேவனிலும் அவரது வார்த்தையிலும் நிலைத்திருங்கள்.** யோவான் 15:7.
>
> **விசுவாசத்துடன் ஜெபியுங்கள்.** எபி 11:6; யாக் 1:6; மாற்கு 11:24; மத் 21:22.
>
> **உங்கள் இருதயத்தின் நிலையை ஆராயுங்கள்; பெருமையாக இருக்கிறதா? தாழ்மையாக இருக்கிறதா?** யாக் 4:6; 1பேதுரு 5:6.
>
> **இடைவிடாமல் ஜெபியுங்கள்.** 1தெச 5:17,18.
>
> **மற்றவர்களை மன்னியுங்கள்.** மாற்கு 11:25,26.
>
> **முழுக்காட்சியையும் தேவன் பார்த்து, நமக்கு எது சிறந்தது என்று அறிந்திருக்கிறார். ரோமர் 8:28; எபே 3:20; எரே 29:11–13. சிலசமயங்களில் பவுலுக்குச் சொன்ன அதே பதிலை நமக்குச் சொல்லலாம்: 'என் கிருபை உனக்குப் போதும்.'** 2கொரி 12:9.

பதிலளிக்கப்படாத ஜெபங்களைப்போலத் தோன்றும் சூழல்களில் நாம் எப்படி எதிர்வினையாற்றுகிறோம் என்பதைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணி எது தெரியுமா? தேவனைப்பற்றி நாம் கொண்டுள்ள எண்ணமே அது. அத்தகைய நேரங்களில், தேவன் உங்கள்மீது வைத்திருக்கிற அன்புகுறித்த ஆதாரங்களை வேதாகமத்தில் தேடுங்கள், அவரைக்குறித்த சிதைந்த பார்வை தெளிவாகும்படி ஜெபியுங்கள்.

# ஜெபிக்கிறவிதத்தை இயேசு போதிக்கிறார்

பெரும்பாலும் மனப்பாடம்பண்ணி செய்யப்பட்ட ஜெபங்களே இயேசுவின் காலத்தில் உயர்வாக மதிக்கப்பட்டன. ஒரு நாடக வசனம்போல, மிக நீளமாக, கடினமான வார்த்தைகளால் எழுதப்பட்டவை அவை. இத்தகைய ஜெபங்களை இயேசு உயர்வாகப் பார்க்கவில்லை. மத் 6:5-8. அவை 'பக்தி'போலக் காட்டிக்கொள்ளும் வெளிவேஷக் காட்சிகள் என்றார்.

இயேசு ஜெபிப்பதை சீடர்கள் பார்த்தார்கள்; அவரது வாழ்க்கையில் ஜெபம் ஒரு முக்கிய அங்கமாக இருந்தது. லூக் 5:16; 6:12; 9:18; 22:41; 24:30; மாற்கு 1:35; 6:46. மதத்தலைவர்களின் ஜெபங்களிலிருந்து அவர் ஜெபம் மாறுபட்டிருந்தது; ஜெபம் என்பது தாங்கள் இதுவரை நினைத்ததைவிட மேலானது என்பதை உணர்ந்தார்கள். அதனால் சீடர்கள் இயேசுவிடம் வந்து, 'ஜெபம்பண்ண எங்களுக்குப் போதிக்கவேண்டும்' என்று கேட்டார்கள். லூக் 11:1.

தினமும் நாம் பயன்படுத்துகிற வார்த்தைகளாலேயே நாம் ஜெபிக்கலாம் என்பதை இயேசு தம் சீடர்களுக்கு க் காண்பித்தார்; நமக்கும்தான். நம் ஜெபம் உண்மையானதாக, நம் இருதயத்திலிருந்து வரவேண்டும் என்று காண்பித்தார்.

லூக் 11:2-4; மத் 6:5-15 ஐ வாசித்து, இயேசு போதித்த ஜெபத்தின் பின்வரும் அம்சங்களைக் கவனியுங்கள்:

**பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே:** அனைத்திற்கும் பிதாவானவருடன் நீங்கள் தனிப்பட்ட உறவில் இருப்பதைத் தெரிவித்தல்.

**உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக:** தேவனுடைய பரிசுத்தம் நம்மைப் பயபக்தியோடும் மரியாதையோடும் அவரிடம் செல்லவைப்பதை உணர்தல்.

**உம்முடைய ராஜ்யம் வருவதாக:** தேவனுடைய வருகைக்காக ஏங்குவதும், அவர் வரும்வரை ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ண வாஞ்சிப்பதும்.

**உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக:** நம் தேவைக்காகமட்டும் ஜெபிக்காமல், தேவனுக்கே எல்லாம் தெரியும் என்று அவரை நம்பி, நம் வாழ்வில் அவருடைய சித்தம் நிறைவேற நம்மை ஒப்புக்கொடுத்து ஜெபித்தல்.

**எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்று எங்களுக்குத் தாரும்:** உணவு, தண்ணீர் வேண்டுமென உடல்ரீதியாகவும், இயேசுவும் அவரது ஜீவ வார்த்தையும் வேண்டுமென ஆவிக்குரியரீதியாகவும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கேட்டு வேண்டுதல்.

**எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்:** மனந்திரும்புதல், மன்னிப்பைத் தேடுதல், தேவன் நம்மை இலவசமாக மன்னித்ததுபோல, நமக்குத் தீங்கு செய்தவர்களை மன்னித்தல்.

**எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்:** உலகத்தின் தீமையிலிருந்து பாதுகாப்பும் அடைக்கலமும் வேண்டுதல். சங் 91.

**ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்:** நாமும், நம்மிடம் உள்ளவையும், நாம் செய்கிற அனைத்தும் தேவனுக்கே சொந்தமானவை என்பதை அங்கீகரித்தல்; அவர் ஒருவரே நமது மகிமைக்கும் துதிக்கும் தகுதியானவர். 1நாளா 29:11.

நீங்கள் ஏன் இன்னும் அதிகமாய் ஜெபிக்கக்கூடாது? ஒவ்வொரு காலையிலும் உங்கள் முகத்தை தேவனிடம் திருப்பி, மற்றெல்லாரையும்விட உங்களை அதிகமாக நேசிப்பவரிடம் ஏன் பேசக்கூடாது? அதைச் செய்யவேண்டும் என்று தெரிந்தும், செய்யவிடாமல் உங்களைத் தடுப்பது எது? இயேசு நம்மை அழைத்தபடியே, இப்பொழுதே ஜெபியுங்கள்.

# துதி, அறிக்கை, வேண்டுதல், ஸ்தோத்திரம்

மத் 6:5-15இல் இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிற அந்த எளிய ஜெப மாதிரியின்படியே, நாம் தனியாகவும், குடும்பமாகவும் சபையாகவும் ஜெபிக்கலாம்; ஜெபம் என்பது ஒரு நண்பரிடம் பேசுவதுபோல தேவனிடம் பேசுவது. நாம் பல விஷயங்களுக்காக ஜெபிக்கும்படி இயேசு போதித்திருக்க, பெரும்பாலும் நம் ஜெபங்கள் வேண்டுதல்களாகவே இருக்கின்றன.

தானி 9:4-19இல் தானியேலின் ஜெபத்தை வாசித்து, அந்த ஜெபத்திலுள்ள வெவ்வேறு பகுதிகளை ஆராயுங்கள்.

பின்வரும் பகுதிகளையும் உங்கள் ஜெபத்தில் சேர்க்கலாம்:

**துதி:** தேவன் யார், எப்படிப்பட்டவர் என்பதை உணர்வதால் வெளிப்படுகிற ஆராதனைதான் துதி. தேவனுக்கு ஏறெடுக்கப்பட்ட அற்புதமான துதி பாடல் சங்கீதம் 100. அங்கே தேவனைப்பற்றி வருகிற பல பெயர்களையும், அவரது அற்புதமான குணத்தையும் கவனியுங்கள். அவர் உங்களுடைய மீட்பராகவும், இரட்சகராகவும், ஆறுதல் அளிப்பரவராகவும், குணப்படுத்துகிறவராகவும், நல்ல மேய்ப்பனாகவும், அல்பாவும் ஓமேகாவாகவும், கன்மலையாகவும் இருப்பதற்காக அவரைத் துதியுங்கள். இவை ஒரு சில காரணங்கள்தாம்.

**அறிக்கையும் மன்னிப்பும்:** தேவனிடம் நாம் பேசி, அவரில் நிலைத்திருக்கும்போது, அவரிடம் செல்லாமல் நம்மைத் தடுக்கிற அல்லது அவரிடமிருந்து நம்மைப் பிரிக்கிற எதையும் விட்டுவிடத் தயங்கமாட்டோம். நாம் அவருக்கு எவ்வளவு அருகில் இருக்கிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாக நம் தகுதியின்மையையும் பாவநிலையையும் உணருவோம். நம் பாவங்களை அகற்றவும், அவருடைய சாயலில் நம் குணத்தை வடிவமைக்கவும் அது அவரிடம் கெஞ்சச் செய்யும். தேவன் நம்மை மன்னிக்க வேண்டுமென விரும்பினால், மற்றவர்களை மன்னிக்கவும் நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். ‘நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது’ யாக் 5:16.

**வேண்டுதல்கள்:** உங்கள் குடும்பம், நண்பர்கள், ஆரோக்கியம், பொருளாதார நிலை, வேலை, படிப்பு போன்ற விஷயங்களில் என்ன சவால்களைச் சந்திக்கிறீர்கள்? குறிப்பாக, எதில் தேவ கரம் உங்களை வழிநடத்த வேண்டியுள்ளது? யாருக்கு உங்களுடைய ஆதரவு தேவையாக இருக்கிறது, உங்களால் இயன்றமட்டும் அதைக் கொடுப்பதற்கு என்ன செய்யலாம்? இதுபோன்ற விஷயங்களிலும், சம்பந்தப்பட்ட நபர்களிலும் தேவ சித்தம் நிறைவேற வேண்டுமென்று குறிப்பாக ஜெபியுங்கள்.

**ஸ்தோத்திரம்:** பிலி 4:6ஐ வாசித்து, உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிற ஆசீர்வாதங்களைப்பற்றி சிந்தியுங்கள். பெரிய பெரிய விஷயங்கள் மனதில் தோன்றலாம், ஆனால் நாம் சாதாரணமாகக் கருதுகிற சிறு ஆசீர்வாதங்களையும் யோசிக்கலாம். நாம் தொடர்ந்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுவருகிறோம்; ஆனாலும் எவ்வளவு குறைவாக நன்றிகூறுகிறோம்; அவர் நமக்காகச் செய்தவற்றிற்கு எவ்வளவு குறைவாகத் துதிசெலுத்துகிறோம்.

---

**நீங்கள் எதற்கெல்லாம் தேவனைத் துதிக்கவேண்டும்? எந்தப் பாவத்தை அறிக்கை செய்யவேண்டும்? எதை வேண்டவேண்டும், எதற்கு நன்றிசொல்லவேண்டும்? அவற்றை ஏன் இப்போதே செய்யக்கூடாது?**

# ஜெபம்பற்றி பிற கேள்விகள்

தேவனுக்குத்தான் எல்லாம் ஏற்கனவே தெரியுமே, ஏன் ஜெபிக்கவேண்டும்? தேவன் சர்வவல்லவர் என்றால் நாம் ஏன் ஜெபிக்கவேண்டும்? எலன் ஒய்ட் இவ்வாறு விளக்கமளிக்கிறார்: 'நாம் யார் என்பதை தேவனுக்குத் தெரியப்படுத்த ஜெபம் அவசியமல்ல, மாறாக அவரை நமக்குள் ஏற்றுக்கொள்வதற்கு நம்மைத் தகுதிப்படுத்தவே ஜெபம் அவசியம். ஜெபம் தேவனை நம்மிடம் கொண்டுவருவதில்லை, அது நம்மை அவரிடம் கொண்டுசெல்கிறது'. ஜெபிப்பது நமக்கு நல்லது. நம் வாழ்க்கையின் பரபரப்புக்கு மத்தியில் அமைதிகாத்து, தியானித்து, தேவனே அனைத்திற்கும் ஆண்டவர் என்று ஏற்றுக்கொள்ளவும், நம்மை அவரது பாதங்களில் வைக்கவும் ஜெபம் நமக்கு உதவுகிறது. தேவன் செயல்படும்படி அழைக்கும்போது, அதற்கான வழிகள் திறக்கும். நாம் இன்னவிதமாய் ஜெபிக்க வேண்டும் என்று அறியாதபோது, ஆவியானவர் நமக்காகப் பரிந்துபேசுகிறார். ரோமர் 8:26,27.

**எல்லாம் நன்றாக இருக்கும்போது ஏன் ஜெபிக்கவேண்டும்?** வலுவான ஜெப வாழ்க்கைக்கு, சுயநிறைவு மனப்பான்மையும் அகந்தையும் மிகப்பெரிய தடைகளாகும். தேவன் நமக்கு எவ்வளவு தூரம் தேவை என்பதை உணர்ந்தால்தான், அதிகமாக அவரை நோக்கிச் செல்வோம்! பரிபூரணமான தூதர்களே அவரைப் பணிந்து, தொழும்போது, பாவ மனிதர் களாகிய நாம் குறைவாக ஜெபிக்கலாமா? இந்த உண்மைபற்றி மத் 5:6, ஏசா 44:3 என்ன சொல்கின்றன?

**ஜெபத்தில் விசுவாசத்தின் பங்கு என்ன?** 'ஜெபமும் விசுவாசமும் நெருங்கியக் கூட்டாளிகள், இரண்டும் சேர்ந்தே ஆராயப்படவேண்டியவை. விசுவாசத்தோடு செய்யப்படும் ஜெபத்தில் ஒரு தெய்வீக அறிவியல் உள்ளது; தன் வாழ்க்கைப் பணியில் வெற்றிபெற விரும்பும் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவேண்டிய அறிவியல் இது. எபி 11:6. ... மாற்கு 11:24. நம் ஜெபம் தேவ சித்தத்திற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்; அவர் வாக் குறுதி அளித்த காரியங்களையே நாம் கேட்கவேண்டும்; நாம் எதைப் பெற்றாலும், அவரது சித்தத்தை நிறைவேற்ற அதைப் பயன்படுத்தவேண்டும். நிபந்தனைகள் நிறைவேறும்போது, வாக்குறுதி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகிறது'.

**நாம் யாருடன் சேர்ந்து ஜெபிக்கவேண்டும்?** பெரும்பாலும் தனியாக ஜெபிக்க வேண்டும். நீங்களும் தேவனும்மட்டுமே பேசவேண்டும். ஜெபமும் வேதவாசிப்பும்தான் தேவனோடுள்ள உங்கள் உறவுக்கு உயிர்கொடுக்கிற இரத்தம். தேவனிடம் பேசி, அவர் சொல்வதைக் கேட்கும்போது, உங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்க்க நேரம் செலவிடுங்கள். மத் 6:6. குடும்பத்தினரோடும் சிறு குழுக்களோடும் சேர்ந்து ஜெபிக்கலாம். அப் 12:12. எங்கே இரண்டு மூன்று பேர் கூடுகிறார்களோ அங்கே தேவன் இருக்கிறார். மத் 18:20. இறுதியாக, நம் சபைக் குடும்பத்தினரோடு சேர்ந்தும் ஜெபிக்கவேண்டும். யாக் 5:13-16.

**நாம் எவ்வாறு செவிகொடுக்கவேண்டும்?** ஜெபம் என்பது தேவனிடம் பேசுவது மட்டுமல்ல; அவர் நம்மை, 'கிளைகழிக்கவும்', நம் வாழ்க்கைக்கு வழிகாட்டவும் நாம் இடம் கொடுக்கவேண்டும். இதைச் செய்வதற்கான மிகத்தெளிவான, பாதுகாப்பான வழி ஜெபமும் வேத ஆராய்ச்சியும். உங்கள் மனதை சிந்தனையற்ற இடமாக மாற்றாதீர்கள்; சொந்த எண்ணங்களுக்குச் செவிகொடுக்காதீர்கள். மேலுள்ள கருத்துகளில் உங்களுக்குச் சவாலாக இருக்கிற விஷயம் என்ன?

# மேலும் படிக்க:

சுயத்தைக்குறித்துக் குறைவாகவும், இயேசுவைக்குறித்து அதிகமாகவும் சிந்தித்துப் பேசினால், அதிகதிகமாய் அவரோடு இருப்போம்.

சந்தேகமும் பயமும் வழிநடத்தினால், நம்மால் தெளிவாகப் பார்க்க இயலாத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கிறிஸ்துவின்மேல் முழுநம்பிக்கை இன்றி முயன்றால், குழப்பங்கள் பெருகும்; அவை பெரிதாகும். தேவன் எல்லையற்ற அறிவுடையவர்; சிருஷ்டிகள் அனைத்தையும் பார்க்கிறவர்; சகலத்தையும் தமது சித்தப்படி வார்த்தையால் அரசாளுகிறவர். நாமோ உதவியற்றவர்கள்; தனித்து நிற்க முடியாதவர்கள்; இதை உணர்ந்து தாழ்மையோடும் விசுவாசத்தோடும் தேவனிடம் வந்து, நம் தேவைகளை அவரிடம் சொன்னால், நம் கூப்பிடுதலைக் கேட்டு, உதவிசெய்வார்; நம் இருதயங்களில் ஒளிவீசுவார்.

துதியின் செட்டைகளினால் நாம் பரலோகத்தைக் கிட்டிச்சேரலாம். பரலோகச் சபையில் பாடலோடும் இசையோடும் தேவனை ஆராதிக்கிறார்கள். நாம் நம் நன்றியுணர்வை வெளிப்படுத்தும்போது நாமும் பரலோகச் சேனைகளுக்கு இணையாக தேவனை ஆராதிக்கிறோம். ... 'துதியோடும் கீதசத்தத்தோடும்' பயபக்தியின் சந்தோஷத்தோடும் நாம் நம்முடைய சிருஷ்டிகர்முன் வருவோமாக. ஏசாயா **51:3.**

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *மேலுள்ள மேற்கோள்களில் உங்களில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது எது? உங்களில் அதிக சவால்களை உண்டாக்கிய கருத்து எது?*

2 *வேதாகமத்தில் உள்ள மற்றவர்களுடைய ஜெப வாழ்க்கையிலிருந்து நாம் இன்னும் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்? ஒரு சில உதாரணங்கள்: எஸ்றா 10:1; 2இராஜா 13:4; யோனா 4:2, 3; ஆபகூக் 3:1; 2இராஜா 19:14–19; எரே 32:16–25; நெகே 1:4–11; 1இராஜா 8:22–54.*

3 *'ஜெபிக்கும்போது உபவாசமிருந்தால், அதில் உபவாசத்தின் பங்கு என்ன?*

4 *இந்த வாரப் பாடத்தின் விளைவாக, உங்கள் ஜெப வாழ்க்கையில் புதிதாக ஏதேனும் மாற்றம்செய்ய விரும்புகிறீர்களா? அந்த மாற்றங்களை ஏன் இப்போதே செய்யக்கூடாது?*

**பாடச்சுருக்கம்:** உயிரோட்டமான, உறுதியான ஜெப வாழ்க்கை வாழ்ந்தவர்களையும், அவ்வாறு வாழாதவர்களையும்பற்றிய பதிவுகளை வேதாகமத்தில் பார்க்கலாம். அதன் பக்கங்களை நாம் ஆராயும்போது, தேவனோடுள்ள நமது உறவு எந்த நிலையில் இருந்தாலும், நம் நிலையைப் புரிந்துகொள்கிற ஒருவரை நாம் எப்போதும் அங்கே காணலாம். மேலும், நமது பக்தி வாழ்க்கையை ஊக்குவிக்கவும், நம்மை வழிநடத்தவும் கூடிய எண்ணற்ற வாக்குறுதிகளையும் அங்கே காணலாம். ஆவிக்குரிய வளர்ச்சியே நமது இலக்காக இருக்கவேண்டும்; அனைத்து விஷயங்களிலும் நமக்குச் சிறந்த முன்மாதிரியாகவும், நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிற இயேசுவின்மீது நம் கண்களைப் பதிக்கவேண்டும்.

# மாசாய் மக்களுக்கு நம்பிக்கையளித்தல்

கென்யாவைச் சேர்ந்த 16 வயது மாசாய் சிறுவனான ரோம்பாஸ், ஞானஸ்நானம் பெற்ற பிறகு பள்ளிக்குச் செல்ல முடிவு செய்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, தானே வேதாகமத்தை வாசிக்கவேண்டும் என்று விரும்பினார். ஒரு மாசாய் சிறுவன் கல்வி கற்கவேண்டிய அவசிய மில்லை என்று கருதிய அவரது தந்தையும், உடன்பிறந்தவர்களாகிய 32 பேரில் பலரும் அவரை எதிர்த்தார்கள். ஆனால் ரோம்பாஸ் தனது குடும்பத்திலேயே தொடக்கப் பள்ளியை யும், பின்னர் உயர்நிலைப் பள்ளியையும் முடித்த முதல் நபரானார். அதன் பிறகு, உகாண்ட ாவில் உள்ள செவந்த்–டே அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகமான புஜிமா பல்கலைக்கழகத்தில் இறையியல் படிக்க முடிவுசெய்தார். ஆனால் அதற்கு அவருக்குப் பணம் தேவைப்பட்டது.

ஒரு மாலை வேளையில், தன்னைப்போல ஓய்வுநாளைக் கடைப்பிடித்து வந்த தனது சகோதர சகோதரிகளை அழைத்தார். தான் உகாண்டாவிற்குப் பயணம் செய்யவும், புஜிமா பல்கலைக்கழகத்தில் சேர விண்ணப்பிக்கவும் தேவையான 7,000 கென்ய ஷில்லிங்ஸ் கிடைப்பதற்காகத் தனக்காக ஜெபிக்கும்படி அவர்களிடம் கேட்டுக்கொண்டார். ரோம்பாஸ் தரையில் முழங்காலிட, அவரது உடன்பிறந்தவர்கள் ஜெபம் செய்தனர். அவர்கள் ‘ஆமென்‘ என்று சொல்லி முடித்த அடுத்த கணமே, கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. அது அலெக்ஸ் என்கிற அரசியல்வாதி. அவர் ரோம்பாஸின் தந்தையைப் பார்க்க வந்திருந்தார். ரோம்பாஸின் பெரிய குடும்பத்தில் அதிக ஓட்டுகள் இருந்ததால், தேர்தல் நேரத்தில் உதவும் என்பதால், அரசியல்வாதிகள் அங்கு வருவது வழக்கம். அட்வென்டிஸ்ட் அல்லாத அந்த அரசியல்வாதி எதிர்பார்க்காத ஒரு கேள்வியைக் கேட்டார்: “இவ்வளவு பெரிய குடும்பத்திற்கு ஒரு போதகர் இருக்கிறாரா?” சிறுவயதிலேயே ‘போதகர்’ என்று செல்லப்பெயர் வைக்கப்பட்டிருந்த ரோம்பாஸை, அலெக்ஸிற்கு அறிமுகப்படுத்தினார்கள்.

“இப்போது உனக்கு அவசரமாக என்ன தேவைப்படுகிறது?” என்று அலெக்ஸ் கேட் டார். “நான் உகாண்டாவில் உள்ள புஜிமா பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பில் சேரவேண் டும்” என்று ரோம்பாஸ் சொன்னார். அலெக்ஸ் தனது பையிலிருந்து 15,000 கென்ய ஷில் லிங்கை எடுத்து ரோம்பாஸிடம் கொடுத்தார். இது ரோம்பாஸ் ஜெபத்தில் கேட்ட தொகையை விட இரண்டு மடங்கு அதிகமானதாகும். ரோம்பாஸ் உகாண்டாவிற்குப் பயணித்து, இறை யியல் பாடப்பிரிவில் சேந்தார். பின்னர் வகுப்புகள் தொடங்க நாட்கள் இருந்ததால், வீட்டிற் குத் திரும்பினார். அவர் வீட்டிற்கு வந்த அதே நாளில், அலெக்ஸ் மீண்டும் ஒருமுறை அங்கு வந்தார். ரோம்பாஸிற்கு பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்துவிட்டதை அறிந்த அவர், ஒரு கட்டு அமெரிக்க டாலர்களை அவரிடம் கொடுத்தார். ரோம்பாஸ் அதற்கு முன் அமெரிக்க டாலர்களைக் கையில் பிடித்ததே இல்லை. அது அவர் பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் படிப்பதற்கான கட்டணத்தைச் செலுத்தப் போதுமானதாக இருந்தது.



இன்று, ரோம்பாஸ் ஜோஸ்பட் லெகிஷோன் ஊழியப்பணி மனப் பான்மை கொண்ட அட்வென்டிஸ்ட் போதகராக இருக்கிறார். அவரது முயற்சியால், ஆறு ஆலயங்கள் செவன்த்–டே அட்வென்டிஸ்ட் சபை களாக மாறியுள்ளன. தனது தந்தை அட்வென்டிஸ்ட் சபைக்கு தானமாக வழங்கிய நிலத்தில் அவர் ஒரு ஆலயத்தையும் திறந்துள்ளார். அங்கு ஒவ்வொரு ஓய்வுநாளிலும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த 33 பேர் ஆராதனை செய்கிறார்கள்.